# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- monthly question and answer

## September 04 - 10
## ஒரு வரி செய்திகள்

**WEBSITE LINK : https://gkrsinstitute.com/**

**Telegram Link : https://t.me/gkrsInstitute**

**FACEBOOK LINK : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/**

## மாநில செய்திகள்

1. 'ஒரு வார்த்தை'
    - ❖ **அமெரிக்காவைச்** சேர்ந்த ரயில் நிறுவனம் முதலில், ரயில் என்கிற ஒரு வார்த்தையை twitter-ல் பதிவிட்டு அனைவரையும் சவாலுக்கு அழைத்தது.
    - ❖ அமெரிக்க அதிபர் **ஜோபைடனும் ஜனநாயகம்** என்கிற வார்த்தையை பதிவு செய்தார்.
    - ❖ கிரிக்கெட் வீரர் **சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்** என்கிற வார்த்தையை பதிவு செய்தார்.
    - ❖ இந்தச் சவாலில் தமிழக முதல்வர் **மு.க.ஸ்டாலின் திராவிடம்** என்கிற வார்த்தையை பதிவு செய்தார்.

2. உண்டு உறைவிட பள்ளி திட்டம்
    - ❖ அரசு பள்ளி மாணவ மாணவியருக்கு உயர்கல்வி குறித்த வழிகாட்டுதலை வழங்கும் வகையில் **உண்டு உறைவிட பள்ளி எனும் புதிய திட்டம்** நாட்டிலேயே முதன்முறையாக தமிழகத்தில் 14 மாவட்டங்களில் தொடங்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

3. புரிந்துணர்வு ஒப்பந்தம்
    - ❖ நாட்டின் எதிர்கால போக்குவரத்துக்கான தீர்வை கண்டறியும் வகையில் சென்னை ஐஐடி இன்குபேஷன் பிரிவு மற்றும் **டெய்ம்லர்** இந்தியா வணிக வளாக நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி நியமனம்
    - ❖ சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக **எம்.துரைசாமி** நியமிக்கப்பட்டுள்ளார்.

5. தேசிய நல்லாசிரியர் விருது
    - ❖ தில்லியில் நடைபெற்ற தேசிய நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவில் குடியரசு தலைவர் திரௌபதி முர்முவிடம் இருந்து விருது பெறும்,
        - ➢ **ராமநாதபுரம் கீழம்பெல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி** ஆசிரியர் **கே.ராமச்சந்திரன்**,
        - ➢ **புதுச்சேரி முதலியார் பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளி** ஆசிரியர் **டி.அரவிந்தராஜா**

6. புதுமை பெண் திட்டம்
    - ❖ **பேராசிரியர் அன்பழகன் பெயரிலான** பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூபாய் 7500 கோடியில் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் முதல்வர் கூறினார்.
    - ❖ ஏழைப் பெண்களின் திருமணத்துக்கு தாலிக்கு தங்கம் மற்றும் நிதி உதவி

வழங்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது.

- அண்மையில் இத்திட்டம் **மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டமாக** மாற்றப்பட்டது.

### 7. மாற்றுத்திறனாளிகள் உதவியாளரை நியமிக்க ரூபாய் 1000 உதவித்தொகை

- அரசு உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் ஒரு உதவியாளரை வைத்துக்கொள்ள ஏதுவாக **மாதத்துக்கு ஆயிரம் ரூபாய்** உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- இந்த திட்டத்தின் கீழ் 2019-2020 நிதியாண்டில் ரூபாய் 96 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

### 8. காலை சிற்றுண்டி திட்டம்

- காலை சிற்றுண்டி திட்டம் மதுரையில் செப்டம்பர் 15-ம் தேதி தொடங்கப்பட உள்ளது.
- தமிழகத்தில் மாநில அரசின் முழுமையான நிதியை கொண்டு **காலை உணவு திட்டம்** செயல்படுத்தப்பட உள்ளது.

## மத்திய செய்திகள்

### 1. உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடு இந்தியா

- பிரிட்டனை பின்னுக்கு தள்ளி **உலகின் ஐந்தாவது** மிகப் பெரிய பொருளாதார நாடாக **இந்தியா** உருவெடுத்துள்ளது.

### 2. ஏற்றுமதியில் 9.25 சதவீதம் தமிழகத்தின் பங்களிப்பு

- இந்தியாவின் ஒட்டு மொத்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்களிப்பு **9.25 சதவீதம்** என்றார் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன்.

### 3. இரவு வான் சரணாலயம்

- இந்தியாவின் முதலாவது இரவு வான் சரணாலயம் **லடாக்கின் ஹான்லேயில்** மூன்று மாதங்களுக்குள் அமைக்கப்படும் என்றும், இது இந்தியாவில் வானியல் சுற்றுலாவை மேம்படுத்தும் என்றும் மத்திய அறிவியல் தொழில்நுட்ப இணையமைச்சர் **ஜிதேந்திர சிங்** தெரிவித்தார்.

### 4. ஏஐஎஃப்எஃப் பொதுச்செயலாளர்

- அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் பொதுச்செயலாளராக **ஷாஜி பிரபாகரன்** நியமிக்கப்பட்டுள்ளார்.
- புதிய தலைவராக முன்னாள் இந்திய வீரர் **கல்யாண் சௌபே** தேர்வு செய்யப்பட்டார்.

5. மகசேசே விருது பெற கேரள முன்னாள் அமைச்சர் மறுப்பு

- பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபரின் பெயரில் வழங்கப்படும் ரம்மோன் மகசேசே விருதை பெற மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் கேரளா முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் **கே.கே.சைலஜா** மறுப்பு தெரிவித்துள்ளார்.

6. சட்டப்பணிகள் ஆணையத்தின் புதிய தலைவர்

- தேசிய சட்டப்பணிகள் ஆணையத்தின் புதிய தலைவராக உச்ச நீதிமன்ற நீதிபதி **டி.ஒய்.சந்திர சூட்** நியமிக்கப்பட்டுள்ளார்.

7. பிரிட்டன் பிரதமர் ஆகிறார் லிஸ் டிரஸ்

- கன்சர்வேட்டிவ் கட்சியின் புதிய தலைவராக 47 வயதான **லிஸ் டிரஸ்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

8. தில்லி ராஜபாதை கடமை பாதையாக பெயர் மாற்றம்

- புது டெல்லியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ராஜபாதையின் பெயரை **'கர்த்தவ்ய பாதை'** (கடமை பாதை) என பெயர் மாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

9. 2021-ல் மூத்தோர் கொலையில் முதலிடம்

- 2021ஆம் ஆண்டுக்கான தேசிய குற்றப் பதிவுப் பணியகத்தின் இந்தியக் குற்றத்தின் சந்தேகத்திற்கிடமான வேறுபாடு , கொலையால் பாதிக்கப்பட்டவர்களில் முதியோர் எண்ணிக்கையில் **தமிழகம் முதலிடத்தில்** உள்ளது என்பதைக் காட்டுகிறது.

10. வங்கதேச விடுதலைப் போரில் உயிரிழந்த இந்திய வீரர்களின் வாரிசுகளுக்கு உதவித்தொகை

- வங்கதேச விடுதலைப் போரில் உயிரிழந்த காயம் அடைந்த இந்திய ராணுவ வீரர்களுக்கு **'வங்கபந்து'** முஜிபுர் ரஹ்மான் பெயரில் உதவி தொகை வழங்கப்படும் என்று பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

11. மூக்கு வழி கரோனா தடுப்பு மருந்துக்கு அனுமதி

- சுவாச பாதையின் மேற்பரப்பில் கரோனா தொற்று பாதிப்பு ஏற்படுவதை கரோனா தடுப்பூசி தடுப்பதில்லை எனக் கூறிய பாரத் பயோடெக் நிறுவனம் அதற்கு தீர்வு காணும் நோக்கில் **பிபிவி 154** என்ற மூக்கு வழியாக செலுத்தும் தடுப்பு மருந்தை தயாரித்து அந்த மருந்தை சுமார் 4000 தன்னார்வலர்களிடம் பாரத் பயோடெக் நிறுவனம் பரிசோதனை செய்தது.

## 12. மீண்டும் சிவிங்கி புலி திட்டம்

❖ இந்திய காடுகளில் மீண்டும் **சிவிங்கி புலியை** (சீட்டா) அறிமுகப்படுத்தும் திட்டத்தை மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவில் பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் 17 இல் தொடக்கி வைக்க உள்ளதாக மாநில முதல்வர் **சிவராஜ் சிங் சவுகான்** தெரிவித்தார்.

## 13. வாஸ்டாக்

❖ கடந்த செப்டம்பர் ஒன்றாம் தேதி ரஷ்யாவில் **வாஸ்டாக்** என்ற பெயரிலான ராணுவ கூட்டு பயிற்சி தொடங்கியது.

## 14. யுனெஸ்கோ கல்வி நகரங்கள் பட்டியல்

❖ பலதரப்பட்ட மக்களிடையே கல்வியை கொண்டு சேர்ப்பதில் சிறப்பாக செயல்பட்டதற்காக **கேரளத்தின் திருச்சூர், நீலம்பூர்** ஆகிய நகரங்களும் **தெலுங்கானாவின், வாரங்கல்** நகரமும் யுனெஸ்கோவின் கல்வி நகரங்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

## 15. பிரதமர் மோடி ஷேக் ஹசீனா பேச்சுவார்த்தை 7 ஒப்பந்தங்கள் கையெழுத்து

❖ வங்காளதேச பிரதமர் **ஷேக் ஹசீனா** நான்கு நாள் பயணமாக நேற்று முன்தினம் டெல்லி வந்தார்.

❖ **7 ஒப்பந்தங்கள்**

- ➢ பின்னர் இரு தலைவர்களின் முன்னிலையில் 7 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.
- ➢ அவற்றில் இரு நாடுகளின் முதன்மையான அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி அமைப்புகள் இடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மேற்கொள்வதற்கான ஒப்பந்தமும் அடங்கும்.
- ➢ மற்றொரு ஒப்பந்தம் வங்காளதேச ரயில்வேயில் தகவல் தொழில்நுட்ப செயலிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகளில் ஒத்துழைப்பு தொடர்பானது ஆகும்.
- ➢ எல்லையில் உள்ள பொதுவான ஆறான **குசியாராவில் இருந்து** தண்ணீரை திறந்து விடுவது தொடர்பான ஒரு ஒப்பந்தமும் உள்ளது.
- ➢ இதன் மூலம் **தெற்கு அசாமும் வங்காளதேசத்தில் சைல்கட்** பகுதியும் பலன் அடையும்.
- ➢ வங்காளதேச ரயில்வே ஊழியர்களுக்கு,
    - ✓ இந்திய ரயில்வே நிறுவனங்களில் பயிற்சி அளிப்பது,
    - ✓ வங்காளதேசம் நீதித்துறை அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது,
    - ✓ இந்தியாவின் பிரசார் பாரதிக்கும் வங்காளதேச டெலிவிஷனுக்கும் இடையே ஒத்துழைப்பு,
    - ✓ விண்வெளி தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பு ஆகிய

ஒப்பந்தங்களும் அடங்கும்.

**16. பிஎம்-ஸ்ரீ பள்ளிகள்**

- நாடு முழுவதும் அனைவருக்குமான உயர்தரமான கல்வியை வழங்கக்கூடிய 14,000க்கும் அதிகமான **'பிஎம்-ஸ்ரீ'** பள்ளிகளை (எழுச்சி அடையும் இந்தியாவுக்கான பிரதமரின் பள்ளிகள்) உருவாக்கும் திட்டம் ரூபாய் 27,360 கோடிகள் செயல்படுத்தப்பட உள்ளது.

**17. உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசின் வழக்குரைஞர் நியமனம்**

- உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசின் தரப்பில் வழக்குரைஞராக ஆஜராக ராஜபாளையத்தை சேர்ந்த **ராம்சங்கர் ராஜா** நியமிக்கப்பட்டுள்ளார்.

**18. இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரை அமெரிக்க மாவட்ட நீதிபதியாக நியமிக்க பரிந்துரை**

- அமெரிக்க மாவட்ட நீதிபதியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **அருண் சுப்பிரமணியனை** நியமிக்க அந்நாட்ட அதிபர் ஜோபைடன் பரிந்துரைத்துள்ளார்.

**19. உலக திருக்குறள் மாநாடு**

- **'உலக திருக்குறள் மாநாடு-2022'ஐ கம்போடியாவிலுள்ள அங்கோர் தமிழ்ச் சங்கத்தில்** நடத்துகிறது.
- வருகிற **செப்டம்பர் 28ஆம்** தேதி தொடங்கும் இந்த மாநாடு அடுத்த மாதம் **அக்டோபர் 3** ஆம் தேதி வரை நடக்கவுள்ளது

**20. பிரிட்டன் அரசி எலிசபெத் மறைவு**

- பிரிட்டனின் நீண்ட கால அரசி எலிசபெத் உடல் நலக்குறைவால் காலமானார்.
- தனது தந்தை ஆறாம் சார்ஜ் மறைவைத் தொடர்ந்து 1952 இல் அரியணை ஏறிய இரண்டாம் எலிசபெத் சாதனை அளவாக **70 ஆண்டுகள் அரசியாக** இருந்தார்.
- அவரது ஆட்சி காலத்தில் **15 பிரிட்டன் பிரதமர்களை** அவர் நிர்வகித்துள்ளார்.
- **புதிய அரசர் சார்லஸ்:**
  - எலிசபெத்தின் மறைவை அடுத்து பட்டத்து இளவரசர் ஆன சார்லஸ் பிரிட்டனின் அடுத்த அரசர் ஆனார்.
  - பிரிட்டன் அரச வம்ச சட்டத்தின்படி மூத்த மகனும், இளவரசருமான சார்லஸ் உடனடியாக அடுத்த அரசர் ஆனார்.
  - அவர் **மூன்றாவது சார்லஸ்** என அழைக்கப்படுவார் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
  - பிரிட்டன் வரலாற்றில் வயதான அரசராக சார்லஸ் உள்ளார்.

**21. வானிலக்கை தாக்கி அழிக்கும் புதிய ஏவுகணை சோதனை வெற்றி**

- தரையில் இருந்து செலுத்தி அதிவேகத்தில் வானிலக்கை தாக்கி அழிக்கும்

**க்யூஆர்எஸ்ஏஎம் ஏவுகணை** சோதனை வெற்றி பெற்றுள்ளதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) தெரிவித்தது.

### 22. நியூசிலாந்துக்கான புதிய இந்திய தூதர் நியமனம்

- நியூசிலாந்து நாட்டுக்கான புதிய இந்திய தூதராக வெளியுரவு பணி மூத்த அதிகாரி **நீத்தாபூஷன்** நியமிக்கப்பட்டார்.

### 23. ராணுவ கூட்டு பயிற்சி அதிகரிக்க ஒப்புதல்

- இந்தியா ஜப்பான் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும் ராணுவக் கூட்டு பயிற்சியை அதிகரிக்கவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டனது.
- நடப்பு ஆண்டானது இந்தியா ஜப்பான் இடையிலான தூதரக நல்லுறவின் **70ஆவது ஆண்டை** குறிக்கிறது.
- இந்திய கடற்படையின் **மிலன் கூட்டு பயிற்சியில்** ஜப்பான் இணைந்ததற்கும் பரஸ்பர விநியோகம் மற்றும் சேவைகள் ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டதற்கும் இக்கூட்டத்தில் வரவேற்பு தெரிவிக்கப்பட்டது.

### 24. கடமை பாதை (கர்த்தவ்ய பாதை)

- இந்தியா கேட் பகுதியில் இந்தியா கேட் சுதந்திரப் போராட்டத் தலைவர் **நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 28 அடி உயரம் கொண்ட சிலையையும்** பிரதமர் திறந்து வைத்தார்.

### 25. கடத்தல், அந்நிய செலாவணி தீர்ப்பாயத்தின் தலைவர்

- கடத்தல் அந்நிய செலாவணி மோசடி வழக்குகளின் மேல்முறையீட்டு தீர்ப்பாயத் தலைவராக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முனிஸ்வர்நாத் பண்டாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

### 26. இங்கிலாந்து தேசிய கீதம், கரன்சி, பாஸ்போர்ட் மாறுகிறது

- இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத் மறைந்து புதிய மன்னராக சார்லஸ் பதவியேற்ற இருப்பதால் அந்த நாட்டின் தேசிய கீதம், கரன்சி, பாஸ்போர்ட் உள்ளிட்டவை மாறுகின்றன.
- கடந்த 1952 ஆம் ஆண்டில் இங்கிலாந்து ராணியாக இரண்டாம் இரண்டாம் எலிசபெத் பதவி ஏற்றார்.
- அப்போது முதல் அந்த நாட்டின் தேசிய கீதத்தில் **'காட் சேவ் தி குயின்'** என்ற வரிகள் பாடப்பட்டது.
- தற்போது சார்லஸ் மன்னராக இருப்பதால் **'காட் சிவ் தி கிங்'** என்று தேசிய கீதம் மாற்றப்படுகிறது.

### 27. வேலைவாய்ப்பு திறன் தரவரிசை கிரசன்ட் 19 ஆவது இடம்

- அகில இந்திய அளவில் வேலை வாய்ப்பு திறனுக்கான தரவரிசை பட்டியலில்

கிரசன்ட் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்துக்கு **19 ஆவது இடம்** கிடைத்துள்ளது.

### 28. ஆண்டுக்கு 80,000 ரயில் சக்கரங்கள் தயாரிப்பு

- **இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்** கீழ் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 80,000 ரயில் சக்கரங்கள் தயாரிக்கும் வகையிலான ஆலையை நிறுவ முதல் முறையாக தனியார் நிறுவனங்களிடம் ரயில்வே ஒப்பந்த புள்ளி கூறியுள்ளது.

### 29. 2025 ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்க முயற்சி

- காச நோயாளிகளுக்கு உதவுவதற்காக **'நிக்ஷய் 2.0'** என்ற இணையதளத்தை மத்திய அரசு நடத்தி வருகிறது.
- இதன் மூலம் காச நோயாளிகளை தனிநபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லது அமைப்புகள் தத்தெடுத்து அக்கறை செலுத்த முடியும்.

### 30. ஐநா மனித உரிமை ஆணையராக ஆஸ்திரேலிய அதிகாரி நியமனம்

- ஐநா மனித உரிமை ஆணையராக ஆஸ்திரேலிய சேர்ந்த தூதரக உயர் அதிகாரி **வோல்கர் டர்க்** நியமிக்கப்பட்டுள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

### 1. ஓய்வு பெற்றார் செரீனா வில்லியம்ஸ்

- மகளிர் ஒற்றையர் பிரிவில் முடிசூடா ராணியாக திகழ்ந்த அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் மொத்தம் **23 கிராண்ட்ஸ்லாம்** சாம்பியன் பட்டங்களை கைப்பற்றியுள்ளார்.
- உலகின் நண்பர் ஒன் வீராங்கனையாக நீண்ட காலம் இருந்த பெருமையும் அவர் வசம் உள்ளது.

### 2. டபுள்யுடிஏ 250 போட்டி

- சென்னையில் இதுவரை சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியே நடந்ததில்லை.
- அக்குறையை போக்கும் வகையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் முயற்சியால் **டபுள்யுடிஏ 250 டென்னிஸ்** போட்டிய முதன்முதலாக சென்னை நுங்கம்பாக்கம் எஸ்டிஏடி டென்னிஸ் மைதானத்தில் வரும் 12 முதல் 18ஆம் தேதி வரை நடக்கிறது.

### 3. தமிழக முதல்வரின் மாநில விளையாட்டு விருதை தமிழக அரசு அறிவித்துள்ளது

- தமிழக அரசு 2018-19 மற்றும் 2019-20 ஆம் ஆண்டுக்கான 8 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான முதல்வரின் மாநில விளையாட்டு விருதை அறிவித்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டிற்கான டென்னிஸ் வீரர்கள் **எஸ்.பிருத்வி சேகர்** மற்றும்

**ஜீவன் நெடுஞ்செழியன்** ஆகியோர் சிறந்த விளையாட்டு வீரர்களாக (ஆண்கள்) பெயரிடப்பட்டுள்ளனர்.

- **ஸ்ரீ நிவேதா** (படப்பிடிப்பு) மற்றும்
- **சுனயா சாரா குருவில்லா** (ஸ்க்வாஷ்) ஆகியோர் சிறந்த விளையாட்டு வீரர்களாக (பெண்கள்) பெயரிடப்பட்டுள்ளனர்.
- அதே சமயம் **வி.பி. தனபால்** ( கூடைப்பந்து) சிறந்த நடுவராகவும், தமிழ்நாடு கூடைப்பந்து சங்கம் சிறந்த அமைப்பாளராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- 2019-20 ஆம் ஆண்டிற்கான புல்வெளி டென்னிஸ் வீரர் **பிரஜ்னேஷ் குணேஸ்வரன்** மற்றும்
- தடகள வீரர் **ஆர்.மோகன் குமார்** ஆகியோர் சிறந்த விளையாட்டு வீரர்களாக (ஆண்கள்) பெயரிடப்பட்டுள்ளனர்.
- மேலும் **பி.அனுஷியா பிரியதர்ஷினி** (டேக்வாண்டோ) மற்றும்
- **எஸ்.செலினா தீப்தி** ( டேபிள் டென்னிஸ்) ஆகியோர் சிறந்து விளங்குகின்றனர்.

### 4. யுஎஸ் ஓபன்

- **5.15 புதிய சாதனை:**
  - **அல்கராஸ் - சின்னர்** மோதிய ஆட்டம் ஏறத்தாழ இறுதி சுற்று போல் பரபரப்புடன் **5 மணி நேரம் 15 நிமிடங்கள்** நீடித்தது.
- ஆட்டம் நிறைவடைந்த நேரம் அடிப்படையில் யூ எஸ் ஓபன் வரலாற்றிலேயே மிகத் தாமதமாக நிறைவடைந்த ஆட்டம் இதற்கு முன் **நள்ளிரவு 2 மணி 26 நிமிடங்களுக்கு** நிறைவடைந்ததே அதிகபட்சமாக இருந்தது.

### 5. வரலாறு படைத்தார் நீரஜ் சோப்ரா

- ஸ்விட்சர்லாந்தில் நடைபெற்ற **டைமண்ட் லீக் பைனல்ஸ்** போட்டியில் இந்திய ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ரா சாம்பியன் பட்டம் என்று சாதனை படைத்தார்.